कार्यालय मुख्य आयुक्त दिव्यांगजन
Office of Chief Commissioner for
Persons with Disabilities

सत्यमेव जयते

स्वावलम्बन
Swavlamban
THE DEPARTMENT OF
EMPOWERMENT OF PERSONS
WITH DISABILITIES

iProbono INDIA



NYTIMES.COM

# காவல் துறையினருக்கான வழிகாட்டி

# மாற்றுத்திறனாளிகளுடன் பணியாற்றுவது எப்படி

www.i-probono.in
communications@i-probono.com

## தேவையான நேரடி (Physical) மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு

- பேட்டரி பொருத்திய சக்கர நாற்காலிகள் செல்லக் கூடிய வகையில் வலிமையான சாய்வு தளங்கள் (Ramps) நிறுவுதல், தொட்டுணரக்கூடிய வரைபடங்கள், உறுதியான கைப்பிடி பொருத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான கழிவறைகள் ஆகியவற்றை நிறுவ வேண்டும்
- வாகனங்களில் சக்கர நாற்காலிகளுக்கான இடங்கள் மற்றும் நன்கு செயல்படும் மின்தூக்கிகள் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும்
- தேவைப்பட்டால் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கு சென்று பார்வை இடவேண்டும்
- பயனாளர்கள் எளிதில் புகார் தெரிவிக்கும் வகையில் செயலி அமைக்க வேண்டும். அந்தச் செயலி ஸ்கிரீன் ரீடர்கள் (Screen Reader) மற்றும் சைகை மொழியுடன் (Sign Language) கூடிய வீடியோ விளக்கத்துடன் இருக்க வேண்டும்
- படங்களை விளக்க உரையுடனும் (Alt Text), அனைத்து ஆவணங்களை அணுகத்தக்க வடிவங்களிலும் வழங்க வேண்டும் (ePUB or OCR-based PDFs)

## தேவையான நேரடி (Physical) மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு

- மாற்றுத்திறனாளிகளுக்கு (PWD) மாவட்ட ஆட்சியரிடம் பாதுகாப்பு பெறுவது பற்றி தெரிவிக்க வேண்டும்.
- கீழ்க்கண்டவை பற்றிய விவரங்களை வழங்க வேண்டும்.(அ) அருகிலுள்ள மறுவாழ்வு நிறுவனங்கள். (ஆ) இலவச சட்ட உதவி.
- மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்குப் பொது சுகாதார நிறுவனங்களில் அனுமதி மறுக்கப்படுவதில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு *7 RPD* சட்டம் *2016.*

- மாற்றுத்திறனாளிகளின் வழக்குகளை விரைவாக விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும், சிறப்பு நீதிமன்றம் குறித்த தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்



## மாற்றுத் திறனாளிகளுக்குத் தெளிவான தகவல்களை வழங்க வேண்டும்

மாற்றுத்திறனாளி (PWD) குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தாலும் பாதிக்கப்பட்டவராக இருந்தாலும் சாட்சியாளராக இருந்தாலும் அல்லது காவல்துறையின் உதவியை நாடுபவராக இருந்தாலும் மாற்றுத்திறனாளியிடம் நேரடியாகப் பேசி பரிவுடன் அவர்கள் கூறுவதைக் கேட்க அவர்களுக்கு நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர்களுடன் உதவியாளர்கள் இருப்பினும் கூட, கேள்விகள் மற்றும் தகவல்களை, சம்மந்தப்பட்ட மாற்றுத் திறனாளியிடமே தெரிவிக்க வேண்டும்.

**செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு:** வசன வரிகள், சைகை மொழியுடன் கூடிய வீடியோ அழைப்புகள் மற்றும் ஆவண மொழி பெயர்ப்புகள் போன்ற பல்வேறு தொடர்பு முறைகளைப் பயன்படுத்த வேண்டும். பல்வேறு முறையிலான தகவல் தொடர்பு முறைகளை அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பயன்படுத்த விரும்பும் முறையை அறிய வேண்டும்.

**பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு:** ஆடியோ பதிவுகள் அல்லது பிரெய்லி போன்ற மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக் கூடிய வடிவங்களில் தகவல் வழங்க வேண்டும். தேவையான அனைத்து ஆவணங்களும் தகவல்களும் அவர்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வடிவங்களில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், அறிவுசார் குறைபாடு (Intellectual Disability), அறிவாற்றல் குறைபாடு (Cognitive Disability) உள்ளவர்களுக்கு:** தகவல் தொடர்புக்கு ஆதரவாக படங்கள் மற்றும் உருவ படங்களைப் (Pictogram) பயன்படுத்த வேண்டும். அவர்களுக்கு உகந்த சுற்றுபுறத்தை ஏற்படுத்தும் வகையில் சிறப்புக் கல்வியாளர்கள் அல்லது மனநல நிபுணர்களின் ஈடுபாட்டை உறுதி செய்ய வேண்டும்.


பிரிவு *12 RPD* சட்டம் *2016.*

## விசாரணையின் போதும் அறிக்கைகளைப் பதிவு செய்யும் போதும்

- மாற்றுத்திறனாளிகளின் எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும். மேலும் அவர்களின் விருப்பமான வடிவத்தில் அறிக்கை நகலை வழங்க வேண்டும். அவர்களுக்குக் கூடுதல் நேரம் தேவைப்பட்டால் அத்துடன் அமைதியான இடம் வழங்கி அவர்கள் துல்லியமாக மதிப்பாய்வு செய்யவும் கையொப்பமிடவும் வழிவகை செய்ய வேண்டும்.
- சட்ட விதிமுறைகள் நன்கு அறிந்த சைகை மொழி வல்லுனர்கள் (அ ) குடும்ப உறுப்பினரைப் ஈடுபடுத்த வேண்டும்.
- சோதனை அடையாள அணிவகுப்புகளை (TIP) நடத்தும் பொழுது குற்றவியல் நீதிபதி பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டிருகிறதா என்பதை உறுதிப் படுத்த வேண்டும். மேலும் வெளிப்படைத் தன்மைக்காக வீடியோ பதிவு செயல்முறைகளையும் உறுதி செய்ய வேண்டும்.
- ஒரு பெண் காவல் அதிகாரி, மாற்றுத்திறனாளி பெண்ணின் வாக்குமூலத்தை அவருக்கு விருப்பமான இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தேவைப்பட்டால் மொழிபெயர்ப்பாளர் அல்லது உதவியாளர் ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும். செயல்முறை அனைத்தும் துல்லியமாக வீடியோ படப்பிடிப்பு எடுக்கப்பட வேண்டும்.

## கைது செய்யும் போது மாற்றுத்திறனாளிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்

- அனைத்து விதமான தடுப்பு காவல்களிலும் சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகிறதா அல்லது தன்னிச்சையாக செயல்படுத்தப் படுகிறதா என்பதை சரிபார்த்தல் வேண்டும்.நீதிபதிமுன் முதன் முதலில் ஆஜர் படுத்தும் பொழுது மாற்றுத் திறனாளிக்கான ஆவணம் அல்லது அது தொடர்பான கோரிக்கைகள் ஏதும் இருப்பின் அதனை கைது ஆவணங்களுடன் இணைத்து நீதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும்.



- சக்கர நாற்காலிகள் மற்றும் செவிப்புலன் கருவிகள் போன்ற தனிப்பட்ட உதவி உபகரணங்கள் சம்மந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளிடமே இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். உதவி உபகரணங்களை கவனமாகக் கையாள வேண்டும். அவை சேதமடையாமலும் மாற்றுத்திறனாளியிடமிருந்து அகற்றப்படாமலும் இருத்தலை உறுதிப்படுத்த வேண்டும்.
- கைது செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிக்கு வழங்கபட்டிருக்கும் சட்ட ரீதியான உரிமைகளை அவருக்கு புரியும் வகையில் தெரிவிக்க வேண்டும். குறிப்பாகக் காதுகேளாத நபர்களுக்கு கைவிலங்கு இடுவதை தவிர்க்க வேண்டும். கைவிலங்கு இடுவதால் அவர்களின் சைகை மொழி பயன்பாடு தடைசெய்யப் படுகிறது.

குறிப்பு*:* மாற்றுத்திறனாளிகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பது குறித்துப் பக்கம் *1* இல் பார்க்கவும்.

## மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல்

- மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் தவறாக நடத்தப்பட்டாலோ அல்லது புறக்கணிக்கப்பட்டாலோ நீதிபதிக்குத் தெரிவிக்கவும்.
- சுற்றித் திரியும் அல்லது ஆபத்தில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்குப் பாதுகாப்பு மற்றும் உதவி வழங்க வேண்டும். காணாமல் போனோருக்கான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அவர்களின் குடும்பத்தைக் கண்டறிய முயற்சி செய்ய வேண்டும்.
- பாதுகாப்பு நடவடிக்கை தேவைப்படும்போது அதற்கான காரணங்களை சம்பந்தபட்ட நபருக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விளக்கிக் கூற வேண்டும்.
- 24 மணி நேரத்திற்குள் அந்த நபரை பொது சுகாதார நிலையத்திற்கு, உடல் நல மதிப்பீட்டிற்காக அழைத்துச் செல்ல வேண்டும்.
- மாற்றுத்திறனாளிகளை லாக்-அப் அல்லது சிறைசாலையில், தடுப்புக் காவலின் பெயரில் வைக்க கூடாது. மருத்துவச் சேர்க்கை தேவையில்லை என்றால் அந்த நபரை வீட்டிற்கு அல்லது அரசாங்கக் காப்பகத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை சட்டம் 2016 இன் கீழ் குற்றங்கள்

**மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016 தொடர்பான அனைத்து விதிமீறல்களும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். (Section 89)**

- **முதல் குற்றம் : அதிகபட்ச அபராதம் ரூ.10,000/-**
- **மீண்டும் மீண்டும் குற்றம் செய்பவருக்கு: ரூ.50,000/- முதல் ரூ.5 லட்சம் வரை**

**மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான கொடுமைகள் (பிரிவு 92):**

- உடல் ரீதியான வன்முறை அல்லது காயம் ஏற்படுத்தும் கொடூரமான செயல்.
- பொதுவெளியில் அவமதிப்பு அல்லது துன்புறுத்தல்.
- உடல்ரீதியாக தாக்குதல் அல்லது முறைகேடு (Absue).
- உணவு அல்லது திரவ உணவு மறுப்பது.
- குழந்தை அல்லது பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல்.
- அவர்களுடைய பொருட்களை சேதப்படுத்தக் காரணமாக இருத்தல் அல்லது சேதப்படுத்துதல் .
- ஒரு பெண்ணின் அனுமதியின்றி மருத்துவச் செயல் முறையைச் செய்தல்.

**இந்தச் செயல்களுக்கு ஆறு மாதங்கள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்**

**ஒரு நபர் மாற்றுத்திறனாளிகளுக்கான பயன்களை ஏமாற்றி பெறும் பட்சத்தில் (பிரிவு 91)**

- **அதிகபட்ச அபராதம் ஒரு லட்சம் ரூபாய்; அல்லது**
- **இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது இரண்டும்**

## BNS, 2023 இன் கீழ் உள்ள குற்றங்களின் பட்டியல்

**மனநலம் பாதிக்கப்பட்ட அல்லது உடல் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்கு எதிரான கற்பழிப்பு (பிரிவு 64(2)(k))**

குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை மேலும் குற்றவாளிக்கு அபராதத்துடன் கூடிய வாழ்நாள் ஆயுள் தண்டனையாக நீட்டிக்கப்படலாம்.

**தன்னிச்சையாகக் கடுமையான காயத்தை ஏற்படுத்துதல், இதன் விளைவாக நிரந்தர ஊனம் அல்லது உணர்வற்ற நிலை (பிரிவு 117(3)):**

குறைந்தபட்சம் பத்து வருடங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனை. மேலும் இது குற்றவாளியின் வாழ்நாள் முழுவதும் ஆயுள் தண்டனை வரை நீட்டிக்கப்படலாம்.

**கடுமையான காயம் (பிரிவு 116)**

காயத்தின் விளைவாக,

- இனப்பெருக்கம் செய்யும் திறன் இழப்பு (emasculation).
- ஒன்று அல்லது இரண்டு கண்களிலும் நிரந்தரப் பார்வை இழப்பு.
- ஒன்று அல்லது இரண்டு காதுகளிலும் நிரந்தர காது கேளாமை.
- உடலின் ஏதேனும் உறுப்பு அல்லது மூட்டு இழப்பு.
- உடல் உறுப்பு அல்லது மூட்டின் செயல்பாட்டிற்கு நிரந்தரச் சேதம்.
- தலை அல்லது முகத்தின் நிரந்தரச் சிதைவு.
- எலும்பு அல்லது பல் உடைதல் அல்லது இடம் பெயர்தல்.உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் எந்தவொரு காயத்தையும் ஏற்படுத்துதல் அல்லது 15 நாட்களுக்கு மேல் வலியை ஏற்படுத்துவது அல்லது ஒரு நபர் தனது வழக்கமான செயல்பாடுகளை மேற் கொள்ள இயலாதவாறு செய்தல்.

**அமிலத்தால் (ACID) நிரந்தர அல்லது பகுதி சேதம் (பிரிவு 124(1))**

குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை, மேலும் இது ஆயுள் தண்டனை வரை நீடிக்கப்படலாம் மற்றும் மருத்துவச் செலவை ஈடுகட்ட அபராதம்.

## தொடர்புடைய சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள்:

- மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம் - 2016 (RPD சட்டம்).
- மனநல பாதுகாப்பு சட்டம் - 2017 (MHC சட்டம்)
- பாரதிய நியாய சன்ஹிதா - 2023 (BNS).
- பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா - 2023 (BNSS).
- காவலர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகம் (BPRD), உள்துறை அமைச்சகம் (2021).
- அணுகக்கூடிய இந்தியா பிரச்சாரத்தின் (AIC) வழிகாட்டுதல்கள் படி ஏற்படுத்தப்பட்ட MHA வின் தரநிலைகளுடன் கூடிய உடகட்டமைப்புகள் கொண்ட காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் மற்றும் பேரிடர் தணிப்பு மையங்கள் (MHA, AIC வழி காட்டுதல்கள் - 2021)
- பத்தான் ஜமால் வாலி Vs ஆந்திரப் பிரதேச மாநிலம் (2021) என்ற தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள்.


icare



कार्यालय मुख्य आयुक्त दिव्यांगजन
Office of Chief Commissioner for Persons with Disabilities

स्वावलम्बन
Swavlamban
THE DEPARTMENT OF EMPOWERMENT OF PERSONS WITH DISABILITIES

iProbono INDIA

# தொடர்புக்கு


www.i-probono.in

communications@i-probono.com

+91 11 4751 3134

/@iprobonoindia /@iProbono /@iProbonoIndia